## நர சந்திரபாபு நாயுடுவுக்கு ஓர் ‘அரைகுறை’ பாமரனின் பகிரங்கக் கடிதம்!

# நாயுடுகாரு, மீக்கு ‘தொருக்குனா இட்வன்டி சேவா!’ 1

பிரியமைன ஆந்திர முக்ய மந்திரி என்.சந்திர பாபு நாயுடு காரிக்கி, வந்தனம்,

தெலுகு நாக்கு ராசே தானிக்கி சதுவேதானக்கி ராது. கொஜ்ஜிக தெலுகினி நேனு மாட்லாடுதுனு. அந்தே. தெலுகு, தேட்டா தெனுகு அன்ட்டாரு. கொப்ப கவி பாரதி ‘சுந்தர தெலுங்கு’ அனி ராசி பெட்டுன்டாடு. பாட்டினி வினுதே, தானி அந்தரு தெலுசு குன்ட்டாமு, மீக்கு தெலுசு-மா மாத்ரு பாஷ ‘தமிழ்’ அனி. நேனு தானி ‘அரவம்’ அனி சொப்பகலனு, ஆ ‘டெர்ம்’ மஞ்சிது காது. தெலுகுனி நேனு மாட்லாட நேர்சுகுன்னான்னு அன்டே, அதி மா நைன ரெய்ச் சூர்ல உண்டே டப்புடு ஜெரிகின்னதி. கொஜ்ஜிக தெலுசுக் குன்னாமு.

ஒக்க introduction காவாலனி இலேக்கா ராசி பெட்டினானு. வேற விஷயமுந்தி ராசி தானிக்கி. இப்புடு, நேனு நா மாத்ரு பாஷலேனி ராஸ்தானு. வந்தனம்.

கடந்த ஏப்ரலில் 16 முதல் 18 வரை மக்களவை சிறப்புக் கூட்டம் என்கிற அறிவிப்பு 13, 14 ஆம் தேதிகளில் தெரிந்தது. 14 ஆம் தேதியே எங்கள் தலைவர் ஸ்டாலின் மக்களவையில் தொகுதி வரையறை, மகளிர் இடஒதுக்கீடு, யூனியன் பிரதேச மசோதாக்கள் (2026) தாக்கல் ஆகப் போகிறது என அறிந்தார். அதனால் அவர் எதிர்ப்புக் குரலை - போர்க்குரலை எழுப்பினார். நடவடிக்கைகளில் இறங்கினார். தென்னிந்திய முதல்வர்களும் - உங்களைத் தவிர்த்து எதிர்ப்பைத் தெரிவித்து இருந்தார்கள்.

**ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு நீங்கள் இப்போது ஒரு தூணாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். உங்கள் ஆதரவைத் திரும்பப் பெற்றால் மோடி அரசு இருக்காது. கவிழ்ந்துவிடும். அவ்வளவு ‘எவரெஸ்ட்’ உச்சத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால் தென்னிந்தி யாவின் முதல்வர்களுள் ஒருவராக இருந்து கொண்டு உங்கள் குரலைக் காண முடியவில்லையே என்று நான் எங்கள் முரசொலியில் ஒரு பெட்டிச் செய்தியை எழுதினேன்.**

**அதில் நான், ‘நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்புப் பிரச்சினை: சந்திரபாபு நாயுடுவின் கருத்து என்ன?’ என்று கேட்டு இருந்தேன். அதில் ‘அதற்கான சந்தர்ப்பம் வரும்போது தொகுதி சீரமைப்புப் பிரச்சினைப் பற்றிப் பார்த்துக் கொள்ளலாம், இப்போது என்ன அவசரம்?’ என்று அப்போது சொல்லியிருந்தீர்கள். ஆகவே இப்போது உங்கள் கருத்து என்னவென்று கேட்டிருந்தேன்.** முரசொலியில் ஏப்ரல் 16 ஆம் தேதி பெட்டிச் செய்தி வெளியாயிற்று, அதே நாளில் ஆங்கில இந்து நாளேட்டில், ‘Women Reservation Bill Will be Passed: Naidu’ என்று ஒற்றைக் காலத்தில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது. நான் எழுதியதால் நாயுடு கருத்துத் தெரிவித்துவிட்டார் என்று நான் சொல்ல வரவில்லை.

நாயுடு கருத்துச் சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. கருத்தைத் தெரிவித்தார். வினாவும் விடையும் ஒரே நாளில் மக்களுக்குக் கிடைத்துவிட்டன. எப்படியோ நாயுடு வெளியில் வந்துவிட்டார். ஆக, அவர் மோடி அரசைத் தீவிரமாக ஆதரிக்கிறார் என்று நாட்டு மக்களுக்குத் தெரிவித்துவிட்டார் என்றே உங்கள் செய்தியைப் பார்த்து நான் தெரிந்து கொண்டேன்.

அதோடு நான் ஒன்றை உங்களுக்குச் சொல்ல வேண்டும். கடந்த ஏப்ரல் 15 ஆம் தேதி நீங்கள் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவையும் சட்ட அமைச்சர் அர்ஜுன் மேக்வாலையும் சந்தித்தப் பிறகே 16 ஆம் தேதி இந்துவில் உங்களின் ஆதரவு கருத்து வெளியாயிற்று. அதற்குள் இங்கே கர்நாடக துணை முதல்வர் டி.கே. சிவக்குமார், தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி, கேரள முதல்வர் பிணராய் விஜயன் ஆகியோர் மூன்று மசோதாக்களை எதிர்த்த செய்திகள் வெளிவந்தன.

இவற்றில் டி.கே.சிவகுமாரும், ரேவந்த் ரெட்டியும் தி.மு.க.வை ஆதரித்து தமிழ்நாட்டில் பரப்புரைச் செய்தனர். கர்நாடக முதல்வர் சித்த ராமையா மசோதாக்களை எதிர்த்து அறிக்கை வெளியிட்டது ஏற்கனவே வெளிவந்துவிட்து. இதையெல்லாம் நீங்கள் பார்த்து இருப்பீர்கள்.

நீங்களும் டெல்லி அணிக்கும் பரப்புரைச் செய்ய தமிழ்நாட்டிற்கு வந்தீர்கள். நீங்கள் மோடி - இ.பி.எஸ். அணியை ஆதரித்து பேசத் தொடங்கினீர்கள். அது அரசியல் அறம். நான் அது குறித்து உங்களிடம் எதுவும் கேட்க முடியாது.

ஏப்ரல் 20ஆம் தேதி கோவைக்குப் பரப்புரைச் செய்ய வந்தீர்கள். அதே போல சாத்தூர், தளி, ஓசூர் போன்ற சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள உங்கள் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசினீர்கள். இறுதியாகப் பத்திரிகையாளரிடம் தங்களது கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். பரப்புரைக் கூட்டங்களிலும் பத்திரிகையாளரிடமும் நீங்கள் கூறியவைகளை கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம்.

(1) தி.மு.க.வும் காங்கிரசும் 33% மகளிர் இட ஒதுக்கீட்டை ஆதரிக்கவில்லை.

(2) நேரடியாகத் தி.மு.க.வை ஒரு கேள்வி கேட்கிறேன். எதற்காக மசோதாவை நீங்கள் எதிர்க்கிறீர்கள்; அதனால் என்ன இலாபம் அடைந்தீர்கள்; என்ன சாதித்துவிட்டீர்கள்? தமிழ்நாடு டெல்லியைத் தோல்வியுறச் செய்துவிட்டது என்று சொல்கிறீர்கள். நீங்கள் டெல்லியை வீழ்த்தவில்லை. தென்னிந்தியாவுக்குக் கிடைக்க வேண்டிய பங்களிப்பைக் கிடைக்காமல் செய்துவிட்டீர்கள். தென்னிந்தியாவுக்கும் சமூகத்திற்கும் அநீதியை இழைத்துவீட்டீர்கள்.

(3) பிரதமர் மோடியும் ஒன்றிய அரசும் 50% இடங்கள் எல்லா மாநிலங்களிலும் உயர்த்தித் தரப்படும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அமித்ஷாவும் அதை ஒப்புக் கொண்டு இருக்கிறார். தென்னிந்தியாவுக்குரிய பங்களிப்பு கிடைக்கும் என்று தெரிவித்து இருக்கிறார். செய்வார்கள்.

(4) மகளிருக்குத் தி.மு.க. மாபெரும் சாதனைகளை செய்துவிட்டதாகச் சொல்கிறது. நீங்கள் என்ன சாதனை செய்துவிட்டீர்கள்? நாட்டின் மதிப்பையும் மகளிரின் மதிப்பையும் குலைத்துவிட்டீர்கள்.

(5) மகளிர் இட ஒதுக்கீடு, தொகுதி மறுசீரமைப்பு செய்யாமல் நடைமுறைப்படுத்தினால் ஆண்கள் பாதிக்கப்படுவார்கள்.

(6) ஒரு காலத்தில் இந்த மாநிலம் முன்னேறியதாக இருந்தது. சென்னை தென்னிந்தியாவின் புகழ்மிக்கதாய் இருந்தது. அதன் புகழை மெல்ல இழந்து வருகிறது.

(7) மோடி 12 ஆண்டுகள் திறமையாக ஆட்சி செய்து வருகிறார்.

(8) ஆந்திராவை நாங்கள் முன்னேற்றி இருக்கிறோம். ஹைதராபாத்தைப் போல பெங்களூரு விமான நிலையங்களைப்போல சென்னையை மேம்படுத்தவில்லை.

(9) அமராவதியில் 5000 ஏக்கரில் ஒரு விமான நிலையத்தைக் கட்டுகிறேன்.

(10) சென்னையைப் பற்றி யாரும் பேசுவதில்லை. சென்னை மக்கள் அமெரிக்காவுக்குச் சென்று கொண்டு இருக்கிறார்கள். சுந்தர் பிச்சையும் அதில் ஒருவர். தொழில் நுட்பங்களை இந்த அரசால் தமிழ்நாட்டில் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

(11) ஞானமுடன் இருந்து நன்றாகச் சிந்தியுங்கள்.

(12) நானும் திராவிடன். தமிழ்நாடு திராவிட நாகரிகத்தின் மய்யம்.

(13) தமிழ்நாட்டில் உள்ள பல தெலுங்கு குடும்பங்கள் இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

(14) தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளம் எல்லாம் இந்தியாவின் பகுதிகள் - மொழி வேறானாலும் நாம் அனைவரும் இந்தியர்கள் வெறுப்பைப் பரப்பாமல் முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

(15) டபுள் என்ஜின் அரசுகள் உள்ள மாநிலங்களில் வளர்ச்சி தானாக நடைபெறுகிறது. இதற்கு மாறாக தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எதுவும் இல்லை.

**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்



இப்படி மனம்போன போக்கில் கூறியிருக்கிறீர்கள். நீங்கள் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். மதச்சார்பற்ற அணிகளோடு நெருங்கிய உறவில் இருந்தவர். மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுத்தவர். ஆனால் அமராவதி கட்டுமானம் உங்களை மாற்றிவிட்டது. உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களை மோடி அரசிடம் அடகு வைத்துவிட்டு அரசியல் ஆதாயம் பெறுகிறீர்கள். அதற்காகத் தி.மு.க.வை மிகக் கடுமையான முறையில் விமர்சனம் செய்து வருகிறீர்கள். இல்லையென்றால் மோடி சர்க்கார் உங்களை நம்பாது.

தி.மு.க. 33% மகளிர் இட ஒதுக்கீட்டை ஆதரிக்கவில்லை. காங்கிரசும் ஆதரிக்கவில்லை என்கிறீர்கள். இது சரியா? 2023 ஆம் ஆண்டு தி.மு.க., காங்கிரஸ் ஆதரவோடு இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றவில்லையா? அந்தச் சட்டத்தில், புதிதாக நடத்தப்படவிருக்கும் மக்கள் கணக்கெடுப்பை முடித்துவிட்டு தொடர்ந்து மறுசீரமைப்பையும் முடித்துவிடலாம். அதன் பிறகு 33% இட ஒதுக்கீடு மகளிருக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று இல்லையா? இப்போதும் தி.மு.க. 543 மக்களவை உறுப்பினர்களுள் மகளிருக்கு மூன்றில் ஒரு பகுதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றே நாங்கள் கூறுகின்றோம். ஆனால் நீங்களும் சங்பரிவாரங்களும் மகளிர்க்கு இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என்பது தி.மு.க.வின் கொள்கை போலப் பேசி வருகிறீர்களே? இது அறமா என்று நீங்கள் நிதானமாக சிந்திக்க வேண்டும். இப்படி இருக்க, எங்களை நீங்கள் ஞானமுடன் சிந்திக்கச் சொல்கிறீர்கள். நீங்கள் அல்லவா ‘ஞான மருந்த வேண்டும்’ மிகவும் வருத்தப்படுகிறேன், நாயுடு அவர்களே!

நீங்கள் தி.மு.க.வை நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்பதாகச் சொல்கிறீர்கள். மசோதாவை எதிர்த்து தோற்கடித்ததால் என்ன சாதித்து விட்டீர்கள், என்ன இலாபம் அடைந்து விட்டீர்கள் என்கிறீர்கள். ஆம்; தமிழ்நாடு டெல்லியை வென்றிருக்கிறது. தென்னிந்தியாவை காப்பாற்றி இருக்கிறது. அநீதியை நாங்கள் இழைக்கவில்லை. நீதியை நிலைநாட்டி இருக்கின்றோம்.

தி.மு.க. அல்லாத இந்த நாட்டின் குடிமகள் சக்தி ராஜேஸ்வரி என்பவர் வலைதளத்தில் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார். நாட்டு மக்களுக்கு ஒரு எடுத்துக் காட்டின் மூலம் விளக்கி இருக்கிறார். அந்தக் கருத்தை நாயுடுகாருக்கு சமர்ப்பிக்கிறேன்.

**“இப்ப நாடாளுமன்றத்தில் எம்.பி. எண்ணிக்கை அதிகப்படுத்துவது தமிழ்நாட்டிற்கு எப்படி ஆபத்துன்னு ரொம்ப எளிமையா சொல்றேன்.**

**உங்க அப்பாவுக்கு நீங்க, உங்க தம்பின்னு மொத்தம் ரெண்டு பசங்க. உங்களுக்கு தாத்தா சொத்து 5 ஏக்கர் இருக்கு. இப்ப உங்களுக்கும் கல்யாணம் ஆகுது. உங்க தம்பிக்கும் கல்யாணம் ஆகுது. இப்ப நீங்க வேலைக்குப் போயி நல்லா சம்பாதிச்சு, ஒரே ஒரு குழந்தை பெத்துக்கிட்டு நல்லா வாழுறீங்க. ஆனா, உங்க தம்பி ஊதாரி, குடிகாரன், வேலைக்குப் போக மாட்டான். அவனுக்குச் சோறு போட வக்கில்லைன்னாக் கூட 4 புள்ளைகளைப் பெத்து வெச்சிருக்கான். கூட்டுக் குடும்பமா இருக்கிறதால நீங்க உழைப்பதை உங்க ஊதாரித் தம்பி குடும்பமும் உட்காந்து தின்னுது. ‘கூட்டுக் குடும்பம், என்ன பண்ணி தொலையறது...’ன்னு சம்பாதிச்சு குடும்பத்துக்குச் செலவு பண்ணுறீங்க.**

**இப்ப பூர்வீக நிலத்தை சொத்தை பிரிக்கலாம்னு உங்க அப்பா சொல்றாரு. மொத்தம் 5 ஏக்கர். அண்ணன் தம்பிக்கு தலா 2.5 ஏக்கர் அதுதானே சரி. அது தானே நியாயம். ஆனா உங்க அப்பா என்ன சொல்றாரு. உனக்கு ஒரே ஒரு பையன் உன் தம்பிக்கு நாலு பசங்க. அதனால உங்களுக்குச் சரியா சொத்து பிரிச்சு தரேன்”னு சொல்லி ஒரு குழந்தை இருக்கிறதால உனக்கு 1 ஏக்கர். 4 குழந்தை இருக்கிறதால அவனுக்கு நாலு ஏக்கர்”னு சொன்னா என்ன பண்ணுவோம்?**

**‘சூப்பர்ப்பா, அப்பான்னா நீதான் அப்பா’னு சொல்வோமா இல்லை. அப்பாவா இருந்தாக் கூட அயோக்கியப் பயலேன்னு தூக்கிப்போட்டு மிதிச்சு ‘மரியாதையா எனக்கு 2.5 ஏக்கர் தாடா’ன்னு கேட்போமா?**

**இங்க பாதிக்கப்பட்ட நீங்கள் தென்னிந்திய மாநிலங்கள். நாலு பிள்ளை பெத்த ஊதாரி வாழ்க்கை வாழுறவன் வட இந்திய மாநிலங்கள். இப்ப சொல்லுங்க.”**

இந்த வலைதள கருத்தாளி சொல்வது என்ன? குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்திய மாநிலங்கள் தென்னிந்திய மாநிலங்கள். மக்கள் தொகை குறைவாக ஆகிவிட்டது. அதன் அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகளை மறு சீரமைப்புச் செய்தால் தொகுதிகள் குறையும். வட இந்திய மாநிலங்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்தவில்லை. அங்கே மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. அதன் அடிப்படையில் தொகுதிகளை வரையறுத்தால் அவர்களுக்கு அதிக தொகுதி கிடைக்கும்.

நாயுடு அவர்களே தென்னிந்தியா இதனால் பாதிப்பு அடையுமே, அதனால் தொகுதி மறுசீரமைப்பு மசோதாவைத் தோற்கடித்தோம். இது சாதனை அல்லவா? ஆதாயம் அல்லவா? தமிழ்நாடு டெல்லியை வீழ்த்தியது நியாயந்தானே. இந்தத் தொண்டில் - சேவையில் தாங்கள் பங்கேற்றிருக்க வேண்டும். ‘தொருக்குனா இட்வன்டி சேவா’ எனும் வைர வரிகளை உங்களுக்கு நான் நினைவுபடுத்துவதில் தவறு ஏதும் இருக்க முடியாது. நீங்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசை ஆதரித்து விட்டீர்கள். பெருந்தவறு இழைத்துவிட்டீர்கள்.

தொடர்ச்சி நாளை



கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையை சூலூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.



கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையை கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன் கழக நிர்வாகிகளுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.